I/49731/2023

கருவூலக் கணக்கு ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணைகள்,தமிழ்நாடு, சென்னை -35.
முன்னிலை: திரு.க.விஜயேந்திர பாண்டியன் இ.ஆ.ப,

செ.மு.ந.க.எண்.**44906/2021**/எம்**1**

நாள். **06-12-2023**

| | | |
|---|---|---|
| பொருள் | பணியமைப்பு – கருவூலம் மற்றும் கணக்குத் துறை – சென்னை ஓரலகு – திரு.S.பிரசாந்த், இளநிலை உதவியாளர், கருவூலக் கணக்கு ஆணையரகம், சென்னை – பணிநியமனம்- பணிவரன்முறை – ஆணை வழங்கல் | |
| பார்வை | 1 | கருவூலக் கணக்கு கூடுதல் இயக்குநர் (நிர்வாகம்), சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.44906/2021/எம்1 நாள்.27.12.2021 |
| | 2 | கருவூலக் கணக்கு ஆணையரின் கடித ந.க.எண்.44906/2021/எம்1 நாள்.09.02.2023 |
| | 3 | அரசாணை (3ப) எண்.58, நிதி (க.க.2)த் துறை, நாள்.03.10.2023 |

********

**ஆணை:**

கருவூலம் மற்றும் கணக்குத் துறை, சென்னை ஓரலகில் சம்பளக் கணக்கு அலுவலகம் (தெற்கு), சென்னையில் அலுவலக உதவியாளராக பணிபுரிந்து பணியிடை மரணமடைந்த திரு.K.சேகர் அவர்களின் வாரிசான திரு.S.பிரசாந்த் என்பவர் கருணை அடிப்படையில் கருவூலக் கணக்கு ஆணையரகம், சென்னையில் பணியமர்த்தப்பட்டு இளநிலை உதவியாளராக 30.12.2021 முற்பகல் முதல் பணிபுரிந்து வருகிறார்.

பார்வை-3ல் காணும் அரசாணையில் கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்ட திரு.S.பிரசாந்த் (காலஞ்சென்ற திரு.K.சேகர் சம்பளக் கணக்கு அலுவலகம் (தெற்கு), சென்னையில் அலுவலக உதவியாளர் என்பவரின் வாரிசுதாரர் மற்றும் மகன்) கருணை அடிப்படையில், இளநிலை உதவியாளராக 30.12.2021 முற்பகல் முதல் தற்காலிகமாக பணிபுரிந்து வரும் நிலையில், தனியரின் தற்காலிக பணிநியமனம் இளநிலை உதவியாளர் பதவியில் திருப்தி அளிக்கும் படியாக உள்ளதாலும், அப்பதவிக்குரிய மற்றும் கருணை அடிப்படையிலான நியமனத்திற்குரிய அனைத்து தகுதிகளையும் தனியர் நிறைவு செய்துள்ளதாலும், திரு.S.பிரசாந்த், இளநிலை உதவியாளர் அவர்களின் பணியினை தனியர் பணியேற்ற நாளான 30.12.2021 முற்பகல் முதல் வரன்முறைப்படுத்தி அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. இவ்வாறு முன் தேதியிட்டு பணிவரன்முறைப்படுத்தி ஆணையிடப்பட்டதைத் தொடர்ந்து ஊதிய உயர்வு / ஊதிய நிலுவைத்தொகை ஏதுமிருப்பின் தனியர் அவற்றை பெற தகுதியுடையவராகிறார்.

மேலும், தமிழ்நாடு கருவூலக்கணக்குத்துறை பணிவிதிகளின்படி, பணிவரன்முறை நாளான 30.12.2021 முதல் தகுதிகாண்பருவம் துவங்கி ஆணையிடப்படுகிறது. தனியர் தகுதிகாண்பருவம் துவங்கப்பட்டு மூன்றாண்டு தொடர் பணிக்காலத்தில் இரண்டாண்டுகள் தகுதிகாண் பருவத்தினராக கருதப்படுவார் எனவும், தகுதிகாண் பருவம் காலத்திற்குள் தேர்ச்சி பெற வேண்டிய தேர்வுகள் மற்றும் பயிற்சிகள் ஏதேனும் இருப்பின் அதனை நிறைவு செய்ய வேண்டும் எனவும் ஆணையிடப்படுகிறது.

44906/2021/M1

1/49731/2023

Signed by Vijayendra
Pandian K
Date: 06-12-2023 17:45:37

VIJAYENDRA PANDIAN K
கருவூலக் கணக்கு ஆணையர்

பெறுநர்

1. திரு.S.பிரசாந்த்,
   இளநிலை உதவியாளர்,
   கருவூலக் கணக்கு ஆணையரகம், சென்னை
   (உரிய வழி முறையாக)

நகல்

1. முதுநிலை கண்காணிப்பாளர், 'அந' பிரிவு, கருவூலக் கணக்கு ஆணையரகம், சென்னை
2. இருப்புக்கோப்பு.

ந.க.எண் 013788/2023/அநா3

க.க.ஆ
ஒ.நி.35

நாள் 12.23

// நகல் சார்பு செய்யப்படுகிறது //

பெறுநர்

திரு. S. பிரசாந்த்,
இளநிலை உதவியாளர்,
க.க.ஆ. ஒ.நி.35.

[signature] 11/12/23

நேர்முக உதவியாளர் (நிர்வாகம்)
கருவூலக் கணக்கு ஆணையரகம்
ஒருங்கிணைந்த நிதித் துறை வளாகம்
நந்தனம், அண்ணாசாலை,
சென்னை–600 035.

6/8

[signature]
11/12/23